

தேனி வடக்கு மாவட்டம் பிசி பட்டி பேரூராட்சி தலைவர் வழக்கறிஞர் மிதின் சக்கரவர்த்தி ஏற்பாட்டில் பிசி பட்டி பேரூர் பகுதிகளில் போடி தொகுதி கழக வேட்பாளர் முன்னாள் முதல்வர் ஓ பன்னீர்செல்வம் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். உடன் தேனி வடக்கு ஒன்றிய செயலாளர் சக்கரவர்த்தி, பேரூர் செயலாளர் செல்வராஜ், வடக்கு ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் ஜெகதீஷ், வடக்கு ஒன்றிய துணை இளைஞர் அணி அமைப்பாளர் அருள் வாசகன் மற்றும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி நிர்வாகிகள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.



மதுரை மாவட்டம் திருமங்கலம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட செக்கானூரணியில் கழக மாநில துணைப் பொதுச் செயலாளர் திருச்சி என். சிவா எம்.பி., அவர்கள் கழக வேட்பாளர் தெற்கு மாவட்ட செயலாளர் சேடபட்டி மு.மணிமாறனை ஆதரித்து உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார். உடன் பாரதி மணிமாறன், ஒன்றிய செயலாளர் கொ.தன பாண்டியன் மற்றும் கழக நிர்வாகிகள், கழகத்தினர், கூட்டணி கட்சி நிர்வாகிகள், ஆயிரக்க ணக்கான பொதுமக்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.



மதுரை மேற்கு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பரவை பேரூராட்சி பகுதியில் வடக்கு மாவட்ட செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி கழக வேட்பாளர் தலைமைச் செயற்குழு உறுப்பினர் ரகுபாலாஜியை ஆதரித்து தெருத்தெருவாக சென்று உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார். உடன் மாவட்ட அவைத் தலைவர் எம். ஆர்.எம். பாலசுப்பிரமணியன், பொதுக்குழு உறுப்பினர் பரவை மனோகரன், பேரூர் செயலாளர் ராசாமணி, ஒன்றிய செயலாளர் கள் ஆர்.கே.ஜெயராமன், சிறைச்செல்வன், இளைஞர் அணி அன்புச்செல்வன், முன்னாள் துணை சேர்மன் பாலசுப்பிரமணி உள்ளிட்ட திரளான கழக நிர்வாகிகள், கழகத்தினர், கூட்டணி கட்சியினர் என திரளானோர் பங்கேற்றனர்.



மதுரை மத்திய தொகுதி கழக வேட்பாளர், தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன் 57வது வார்டுக்குட்பட்ட ஆரப்பாளையம் மந்தை திடலில் குடைவீடு அருண்குமார் ஏற்பாட்டில் அப்பகுதியில் திரண்டிருந்த ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொதுமக்க ளிடையே உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித் தார். உடன் ஒச்சுபாலு, சின்னம்மாள், வைகை பரமன், பி.டி.மணிமாறன், முத்து கணேசன், எஸ்.எஸ்.மாறன், குடைவீடு ராஜதுரை, சாமி, ஆட்டோ சுரேஷ், விருமாண்டி, துரை, மணி, பழனி, விஜி, ராமு கணேசன், வேலு , இந்திரஜித் கோபி, குபேந்திரன் உள்ளிட்ட திரளான தி.மு.க. நிர்வாகிகள், தி.மு.க.வினர், கூட்டணி கட்சி நிர்வாகிகள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# களத்தில் இளைஞர் அணி

**மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து, கழக இளைஞர் அணி நிர்வாகிகள் வீடு வீடாகச் சென்று, வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டபோது எடுக்கப்பட்ட புகைப்படங்களின் தொகுப்பு.**





திருப்பூர் தெற்கு சட்டமன்றத் தொகுதி,
திருப்பூர் மத்திய மாவட்டம்





பவானிசாகர் சட்டமன்றத் தொகுதி,
ஈரோடு வடக்கு மாவட்டம்.





பழனி சட்டமன்றத் தொகுதி,
திண்டுக்கல் கிழக்கு மாவட்டம்.





பத்மநாபபுரம் சட்டமன்றத் தொகுதி,
கன்னியாகுமரி மேற்கு மாவட்டம்.





போடிநாயக்கனூர் சட்டமன்றத் தொகுதி,
தேனி வடக்கு மாவட்டம்





ஓமலூர் சட்டமன்றத் தொகுதி,
சேலம் மத்திய மாவட்டம்.





திருவரங்கம் சட்டமன்றத் தொகுதி,
திருச்சி மத்திய மாவட்டம்.





ஒரத்தநாடு சட்டமன்றத் தொகுதி,
தஞ்சாவூர் மத்திய மாவட்டம்.





மாதவரம் சட்டமன்றத் தொகுதி,
சென்னை வடகிழக்கு மாவட்டம்